21st October 1971]

Tamil Nadu Raffle Tickets

* 3. *Q.*—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal with the Government to boost the sales of the Tamil Nadu Raffle tickets?

தமிழ்நாடு பரிசுச் சீட்டு

திரு. வி. தங்கபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ்நாட்டில் பரிசுச் சீட்டு விற்பனையை அதிகப்படுத்த அரசாங்கம் செய்ற்குறிப்பு ஏதேனும் வைத்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம். குறிப்பிட்ட திட்டங்களுக் கென தனித் தனிச்சீட்டு விற்பனையை அதிகப்படுத்தும் ஆலோசனை அரசின் ஆய்வில் உள்ளது. பரிசு அமைப்புமுறையை மாற்றி அமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

Medical College Admissions

*4. *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state the action taken by the Government on the judgment of the Supreme Court of India about the selections for admission into the Medical Colleges in this State?

மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்த்தல்

திரு. எம். ஆறுமுகசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில் மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்வதற்கான தேர்வுகள் குறித்து இந்தியத் தலைமை உயர்நீதி மன்றத் தீர்ப்பின் மேல் அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மேலவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை 27-3-71-ல் அனுமதித்திருக்கிறீர்கள். ஆனால் அதற்குப் பிறகு மார்ச் கடைசியிலும் சூன் சூலை மாதங்களிலும் நம்முடைய அவை கூடியிருக்கிறது. இப்போது இந்தக் கேள்வி வருகிறது. இதனால் அந்தக் கேள்வி கேட்டதன் பலனே இல்லாமல் போகிறது என்பதைத் தலைவர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

மிஸ்டர் சேர்மன் : சமீபத்தில் ஒரு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. விடு பட்டுப் போன கேள்விகள் தொடர்ந்து அடுத்த கூட்டத் தொடரில் வருவதற்கு உயிர்கொடுக்கப்பட்டிருப்பதால், தொடர்ந்து அவை வரும்.

---

a Printed as Appendix

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பது சம்பந்தமாகக் கேட்கப்பட்ட கேள்வி மருத்துவக் கல்லூரி தேர்வெல்லாம் முடிந்த பிறகு வருவதால் பலன் இல்லாமல் போகிறது என்பதைத்தான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்படிப்பட்ட கேள்விகளுக்கு முன்னாலும் விடை அளிக்கப்பட்டிருக்கிறது. இப்போதும் அந்தக் கேள்வி தொடர்பாக இருப்பதால் விடையளிக்கப்படுகிறதே தவிர புதிதாக அல்ல.

THIRU A. R. DAMODARAN : May I know from the Hon. Minister whether the same system of selection is likely to be observed during the coming academic year 1972-73 or whether the Government are contemplating any other further change in the system ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 1970-71-ல் கையாளப்பட்ட தேர்வு முறை பற்றி உயர்நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்ட சில கருத்துக்கள் காரணமாக சில மாற்றங்கள் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. 1971-72-க்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது அந்தத் திருத்தங்கள் பலவும் மேற்கொள்ளப்பட்டு புதிய முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட முறை பற்றி மறு பரிசிலனை செய்யும் போது அதை விட சிறந்த திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தால், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் அவை பரிசீலிக்கப்படும்.

திரு. எம். ஆறுமுகசாமி : வரப்போகும் ஆண்டில் மாணவர்களை மருத்துவக் கல்லூரிக்குச் சேர்க்கும்போது அவர்கள் கட்டாயம் கிராமங்களில் ஒரு ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் வேலை செய்ய வேண்டுமென்ற நிபந்தனையை அரசாங்கம் விதிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதை விட இன்னொரு ஆலோசனையும் இருக்கிறது. அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அரசாங்கம்தான் வேலை தர வேண்டுமென்ற கட்டாயம் இல்லை என்ற ஆலோசனையும் இப்போது முன்னால் இருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : 23—9—1970-ல் தலைமை நீதி மன்றத் தீர்ப்பில் தங்களுடைய முன்னாள் தீர்ப்புக்குப் புறம்பாக மதிப்பெண்கள் அளிக்கப்பட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் இப்படித்தான் மதிப்பெண்கள் அளிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்த பின்பு அதற்குப் பிறகு அதற்குப் புறம்பாக மதிப்பெண்கள் கொடுக்க எப்படி அவசியம் ஏற்பட்டது? அப்படிக் கொடுத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : முதலில் பெரும்பாலான மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது எந்த முறை எண்கள் தருவதற்குக் கையாளப்பட்டதோ அதை மீறி தேர்வில் கைவிடப்பட்ட மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது புது முறையை மேற்கொள்வது தவறாகும் என்ற காரணத்தால், அதே முறை கையாளப்பட்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். உயர்நீதி மன்றம் அப்படித் தெரிவித்த பிறகு, மேல் விண்ணப்பம் அப்பீலுக்குச் சென்றபோது, அப்படி மார்க் போட்டது தவறு என்று பின்னர் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு எண்கள் முறை மாற்றப்பட்டது. அப்போதே நடைபெற்ற தேர்வில்கூட, சுப்ரீம் கோர்ட் திட்டவட்டமாகத் தெரிவித்த கருத்துக்கள் அவ்வப்போது அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.